ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2030/20 - 2017 අගෝස්තු මස 01 වැනි අඟහරුවාදා - 2017.08.01

*2030/20 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 02 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதும் 2017.06.30 ஆந் திகதிய 2025/44 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான உடைத்த அரிசி (எச். எஸ். குறியீட்டு இல. 1006.40) சம்பந்தமான உத்தரவு 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 02 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, ஒகத்து 01.*

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| *01* | *10.06* | | *அரிசி* | |
| | | *1006.40* | *உடைத்த அரிசி* | *கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25* |

*08-657*

1A - PG 3640 — 532 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*